# வெலிவிட்டிய தெவிதுர பிரதேச சபை
# காலி மாவட்டம்

-----------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 மார்ச் 30 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

## 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டவாறான விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர, 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான வெலிவிட்டிய தெவிதுர பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கேற்ப உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மூலதன உதவு தொகையாகப் பெறவேண்டிய ரூபா 4,954 அதிகரித்துக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) இரு ஊழியர்களிடமிருந்து அறவிட்டிருந்த பிணை வைப்புத் தொகையான ரூபா 3,600 ஊழியர் பிணை முதலீடாகக் கணக்கில் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

2013 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தே தொடர்ந்தவாறிருக்கும் பெறவேண்டிய முத்திரைக் கட்டணமாகிய ரூபா 526,365 மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு பெறவேண்டிய மீதியாகிய ரூபா 6,657,825 மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்கு மீதியாகிய ரூபா 10,516,018 என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றின்மை

2006 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 ஆந் திகதிக்கு முன்னர் முடிவடைந்த 03 வேலைகளுக்குரிய ரூபா 84,643 மற்றும் கரந்தெனிய பிரதேச சபையிலிருந்து பெற வேண்டியதாகக் காட்டப்பட்ட ரூபா 85,248 என்பவற்றிற்கு எதுவித கோவைகளும் வேறெந்தத் தகவல்களும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

வைப்புக் கணக்கில் காட்டப்பட்ட ரூபா 528,310 கூட்டுத் தொகையுடைய 97 வைப்புகள் சம்பந்தமாக இலங்கை குடியரசின் 570, 571 ஆம் நிதிப்பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறுகள்

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 2,487,077 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவருஞ் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 361,468 ஆகும். இதற்கமைய, மீளாய்வாண்டிற்கான நிதிப் பெறுபேறு ரூபா 2,125,609 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

மீளாய்வாண்டினது முன்னைய இரு ஆண்டுகளினதும் சபையின் வருவாய்க்கான உதவி, சுய உற்பத்தி வருவாய் மற்றும் மீண்டுவரும் செலவினம் தொடர்பான பொழிப்புடனான விபரம் வருமாறு.

| ஆண்டு | மொத்த மீண்டுவரும் வருவாய் | வருவாய் உதவித் தொகை | சுய உற்பத்தி வருவாய் | மொத்த மீண்டுவரும் செலவினம் | சுய உற்பத்தி வருவாயிலும் கூடிய மீண்டுவரும் செலவினம் |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2015 | 24,432,250 | 17,469,972 | 6,962,278 | 21,945,173 | 14,982,895 |
| 2014 | 20,892,000 | 13,634,535 | 7,257,465 | 20,530,531 | 13,273,066 |
| 2013 | 14,401,899 | 8,931,318 | 4,470,581 | 13,250,948 | 7,780,367 |

இது சம்பந்தமாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய இரு ஆண்டுகளைப் போன்றே மீளாய்வாண்டிலும் சுய உற்பத்தி வருவாயிலும் கூடுதலான மீண்டுவரும் செலவினம் நிலவியது.

(ii) வருவாய்க்கான உதவி கிடைக்காது போயின் சுய உற்பத்தி வருவாயின் மூலம் மீண்டு வரும் செலவினத்தை ஈடு செய்வதற்கு எவ்விதத்திலும் வழியேற்படாததுடன், செலவைக் கட்டுப்படுத்துவதைப் போன்றே வருவாயை அதிகரிப்பதற்கும் சபை கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பது கணக்காய்வினது அபிப்பிராயமாகும்.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாயைச் சேகரிப்பதிலான செயலாற்றல்

மீளாய்வாண்டிற்கென மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த மீண்டுவரும் வருவாய் ரூபா 26,829,400 ஆகும். இதில் ரூபா 20,892,000 சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, வருவாய்ச் சேகரிப்பு செயல்முன்னேற்றம் ஏறக்குறைய 78 சதவீதமாக இருந்தது.

### 2.3.2 தீர்வையும் வரியும்

மீளய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டுகளுக்குமான அறவிடப்பட வேண்டியிருந்த தீர்வையும் வரியும் ரூபா 471,220 ஆகும். இதில் ஆண்டின்போது 66 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பந்தியின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதில் சபை கவனம் செலுத்தவில்லை.

### 2.3.3 சேவைக் கட்டணம்

முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் ரூபா 10,678,121 அறவிடப்பட வேண்டியிருந்தது. எனினும், ஆண்டின்போது 40 சதவீதமாகிய ரூபா 4,261,603 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக, ஆண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 6,416,518 வரை அதிகரித்திருந்தத. எனினும், நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 152(4) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 2.3.4 நீதி மன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதி மன்றத் தண்டப் பணமாக ரூபா 57,250 மற்றும் முத்திரைக் கட்டணமாக ரூபா 6,416,518 என்பன பெறப்படவேண்டியிருந்தன.

### 2.3.5 ஏக்கர் வரி

மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறான ஏக்கர்வரி மீதி நிலுவை ரூபா 159,426 ஆகும். சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் கணிப்பு ஒன்றை மேற்கொண்டு ஏக்கர் வரி வருவாயை இனங்கண்டு, அவற்றை அறவிடுவதற்கு முறையான விதிமுறைகளைச் சபை அமுலாக்கியிருக்கவில்லை. 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களது எண்ணிக்கையில் 07 வெற்றிடங்கள் நிலவின. 03 மிகையான பதவியணியினரும் இருந்தனர். எவ்வாறாயினும், வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது மேலதிக எண்ணிக்கையை முறையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறமையின்மை

வெளி நபர்களுக்குரிய 10 காணிகளது உரித்தைச் சபை சுவீகரிக்காது ரூபா 1,425,000 கட்டிடங்களை அமைந்திருந்தது.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

முன்னைய ஆண்டின் 07 நிர்மாணச் செயற்திட்டங்களுக்கான ரூபா 5,404,815 கூட்டுத்தொகை மற்றும் மீளாய்வாண்டினது 09 செயற்திட்டத்தினது ரூபா 4,694,873 கூட்டுத் தொகையைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.5 செயற்திட்டத் தாமதம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2013 ஆம் ஆண்டிற்கான அங்கத்தவர் நிதியேற்பாட்டிலிருந்து வாடுவெலிவிட்டிய தெற்கு, புராண கங்காராம விஹாரையினது அறநெறிப் பாடசாலை மற்றும் முற்பள்ளி என்பவற்றிற்கு ஒரு கழிவறையை நிர்மாணிப்பதற்கு ரூபா 25,000 அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டு முடிவளவிலும் அச் செயற்திட்டம் நிறைவேற்றப்படாது அத்தொகை பொது வைப்புக் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின்போது அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 1,350,000 தொகையுடைய 02 செயற்திட்ட நடவடிக்கைகள் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் முடிவுறுத்தப்படவில்லை.

**4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்**

**4.1 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு**

(அ) மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 02 செலவின விடயங்களுக்கான மொத்த நிதியேற்பாடாகிய ரூபா 64,000 கூட்டுத்தொகையும் மற்றுமொரு செலவின விடய எல்லையிலும் கூடுதலாக ரூபா 44,281 செலவும் 05 வருவாய் விடயங்களது இலக்கை எய்தமுடியாத ரூபா 3,638,761 வருவாயும் நிலவியதால் வரவு, செலவுத் திட்டம் ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரவு, செலவுத் திட்டத்தின் மூலம் சபை ஒவ்வொரு நோக்கத்திற்குமென ஏற்பாடு செய்த நிதியானது பின்னடைவு தென்படுவதால், அது சபைக்கும் சபையின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேச மக்களுக்கும் ஏற்படும் இழப்பாகக் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 என்பவற்றில் காணப்படும் ஏற்பாடுகள் மற்றும் 2014 பெப்ரவரி 24 ஆந் திகதிய தபா/யஹ/01/ந.வ/லே எனும் உள்ளூராட்சி ஆணையாளரது (தென் மாகாணம்) சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடைபெறவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு**

2009 யூன் 09 ஆந் திகதிய DMA/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கையில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கொள்கை அமைப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**4.4 சொத்து முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

**(அ) பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க நிதி அமைச்சின் செயலாளரது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் ரூபா 650,000 கிரயமுடைய லேன்ட்குறுாசர் வாகனம் ஒன்று மற்றும் ரூபா 10,000 கிரயமுடைய நிழற் பிரதி இயந்திரம் ஒன்று தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

**(ஆ) சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

(i) நன்கொடையாகப் பிரதேச சபைக்குக் கிடைக்கப் பெற்ற காணியில் பிரதேச செயலாளரால் ரூபா 980,000 செலவில் சிறுவர் மற்றும் மகளிர் சிகிச்சைகளுக்கான கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. குறித்த கட்டிடத் திட்டத்திற்கு பிரதேச சபையின் அங்கீகாரம் பெறப்படாததுடன், அக்கட்டிடத்தைச் சபை சுவீகரிப்பதற்கான நடவடிக்கையும் மெற்கொள்ளப்படவில்லை.

(ii) சபை பயன்படுத்தும் 03 வாகனங்களது உரித்தைச் சுவீகரிப்பதற்கு மீளாய்வாண்டு முடிவளவிலும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு
(இ) வருவாய் நிர்வாகம்
(ஈ) மனிதவள முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு